(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 28.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, செத்தெம்பர் 22, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0079 / '09

1.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அத்திடிய பாலத்திற்கு அருகாமையில் மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான காணியொன்று இருந்ததாவென்பதையும்,

(ii) ஆமெனில், அக்காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்,

(iii) மேற்படி காணி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு எவரிடமிருந்து பெறப்பட்டதென்பதையும்,

(iv) பர்ச்சஸ் ஒன்று பெறப்பட்ட பெறுமதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தருணமாகும் போது மேற்படி காணி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் பிறிதொரு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாவென்பதையும்,

(ii) ஆமெனில், அது மேற்படி காணியில் எவ்வளவென்பதையும்,

(iii) இவ்விதமாக எவருக்கு விற்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iv) பர்ச்சஸ் ஒன்று விற்கப்பட்ட பெறுமதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு கூறுவாரா?

(இ) (i) மேற்படி காணி விற்கப்பட்டிருப்பின், பெற்றுக்கொண்ட வெளித்தரப்பினர் தற்போது வேறொரு தரப்பினருக்கு விற்றுள்ளாரா அல்லது விற்பனை செய்துகொண்டிருக்கிறாராவென்பதையும்,

(ii) ஆமெனில், பர்ச்சஸ் ஒன்று எப்பெறுமதிக்கு என்பதையும்,

(iii) தற்போது விற்பனை செய்து முடிக்கப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0099 / ' 09

2.

கௌரவ ஆர்.பி. ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் பணியாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் மத்தியில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பட்டதாரி ஆசிரியர்களில் கலை, வணிக, விஞ்ஞான மற்றும் ஏனைய பட்டதாரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(iv) உயர்தரப் பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கின்ற அல்லது கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) அப்பட்டதாரிகள் மத்தியில் ஆங்கிலத்தைப் பட்டப்படிப்பிற்காக பயின்றுள்ள அல்லது ஆங்கில மொழிமூலமாகப் பட்டத்தைப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) இப்பட்டதாரிகள் மத்தியில் கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம் ) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கப் போதியளவு எண்ணிக்கைகொண்ட ஆசிரியர்கள் இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0258 / '09

3.

கௌரவ அஜித் குமார,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமி பேரழிவின் பின்னர் காலி, மகமோதர வைத்தியசாலைக்கு மாற்று வைத்தியசாலையாக கராபிட்டிய வைத்தியசாலையின் அருகில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்த வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டியது எப்போது என்பதையும்,

(iii) அந்த வைத்தியசாலைக்கான நிதி ஒதுக்கீடு எந்த நாட்டின், எந்த நிறுவனத்தின், எந்த நபரால் வழங்கப்படுகின்றது என்பதையும்,

(iv) அந்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(v) வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு ஒரு கடனா அல்லது உதவியா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த வைத்தியசாலையின் ஆரம்பத் திட்டத்தின்படி மாடிகளின் எண்ணிக்கை மற்றும் அதில் உள்ளடங்கும் வசதிகள் என்ன என்பதையும்,

(ii) அந்த திட்டம் பின்னர் மாற்றப்பட்டிருப்பின் அதற்கிணங்க அதன் மாடிகளின் எண்ணிக்கை மற்றும் உள்ளடங்கும் வசதிகள் என்ன என்பதையும்,

(iii) அந்த வைத்திசாலைக்காக தற்போது கிடைத்துள்ள பணம் எவ்வளவு என்பதையும்,

(iv) தற்போது நிர்மாணப் பணிகள் எந்தளவில் இருக்கின்றன என்பதையும்,

(v) மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிக்கும் நிறுவனம் எது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0265 /'09

4.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள புகை வெளியேற்றம் சம்பந்தமான சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களா அல்லது அரசாங்க நிறுவனங்களா என்பதையும்,

(iii) இவை தனியார் நிறுவனங்களாயின் இவ்வாறு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதற்கான காரணம் யாதென்பதையும்,

(iv) மேற்படி நிறுவனங்கள் எந்த அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவ்வாறு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதன் மூலம் முறைகேடுகளும் நுகர்வோருக்கு இன்னல்களும் ஏற்படும் போது மக்களின் உரிமைகள் தொடர்பாக தேவையான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு சட்டரீதியாகவும் நிருவாக ரீதியாகவும் உள்ள ஆற்றல் யாதென்பதையும்,

(ii) இதற்கென 2009 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் மார்ச்சு மாதம் 31 ஆம் திகதி வரை அரசாங்கத்தினால் மேற்படி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

(iii) இவ்வாறு பணம் செலுத்தப்படுகின்ற அடிப்படை யாதென இச்சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புகை வெளியேற்றச் சான்றிதழ் வழங்கப்படும்போது வாகனங்களுக்கு அறவிடப்படும் கட்டணம் யாதென்பதையும்,

(ii) இதன்மூலமாக அரசாங்கத்திற்கு கிடைக்கும் பணத்தொகை யாதென்பதையும்,

(iii) இப்பணத்தில் எவ்வளவு தொகை பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0355 / ’09

5.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநலசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) “நாம் பயிரிடுவோம் தேசத்தை உருவாக்குவோம்” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2008ஆம் ஆண்டு காலி மாவட்டத்துக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டத்துக்காக இவ்வமைச்சினால் ஒதுக்கப்பட்ட தொகை யாது,

(ii) இத்தொகை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) 2008ஆம் ஆண்டில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர் நிதி ஏற்பாடுகளில் இருந்து எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(iv) இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட உறுப்பினர்கள் யாவர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ‘காலு சமய’ கண்காட்சி மற்றும் களியாட்ட பிரசார நடவடிக்கைகளுக்காக உரிய அமைச்சினால் செலவுசெய்யப்பட்ட தொகையை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) “நாம் பயிரிடுவோம் தேசத்தை உருவாக்குவோம்” நிகழ்ச்சித்திட்டத்துக்கு விரிவான பிரசாரம் வழங்கப்பட்டபோதிலும் அதற்கேற்றவாறு காலி மாவட்ட வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவானது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) 2009ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்துக்கு உரிய அமைச்சினால் அதிக தொகையை ஒதுக்கீடு செய்வதற்கு அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0365 / ’09

6.

கௌரவ ஆர்.எம்.காமினீ ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007-2008 ஆம் ஆண்டுகளில் பொலிஸ் திணைக்களத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் ,வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையங்களின் நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்ட கம்பனி யாதென்பதையும் ,

(ii) சம்பந்தப்பட்ட கம்பனிக்கு நிர்மாணிப்புப் பணிகளை கையளிப்பதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும் ,

(iii) கேள்விப் பத்திரத்தின் பிரகாரம் நிர்மாணிப்புப் பணிகளைச் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்ட கம்பனிகள் தனித்தனியாக யாவையென்பதையும் ,

(iv) மேற்படி கம்பனிகளுக்கு பொலிஸ் திணைக்களத்தினால் இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள தொகை யாதென்பதையும் ,

(v) புதிதாக பொலிஸ் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டமைக்காக செலுத்தப் படாதுள்ள தொகை யாதென்பதையும் ,

(vi) மேற்படி கொடுப்பனவுகள் எப்போது செலுத்தப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0389 / '09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா மெரைன் லிமிடெட், வோட்டர்ஸ் எட்ஜ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியன அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்ட திகதி என்னவென்பதையும்,

(ii) ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு ஐந்தொகையுடன் இவற்றின் இலாபம், நட்டம் ஆகியவற்றையும், தனியார் மயப்படுத்தப்பட்டதிலிருந்து இன்றுவரை இவை கைமாற்றப்பட்ட திகதிகளை வருடாந்த அடிப்படையிலும், நிறுவனங்களின் அடிப்படையிலும் தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) லங்கா மெரைன் லிமிடெட், வோட்டர்ஸ் எட்ஜ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை ஆரம்பத்தில் பொறுப்பேற்ற நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட தொகை, செலுத்தப்படவேண்டியுள்ள தொகை ஆகியன என்னவென்பதையும்,

(iii) இவை தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வேலைக்கமத்தப்பட்டிருந்தவர்களது எண்ணிக்கை மீண்டும் அரசாங்கத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட பொழுது வேலைக்கமர்த்தப்பட்டவர்களது எண்ணிக்கை ஆகியவற்றையும்,

(iii) தற்போது வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை என்னவென் பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0450 / '09

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாட்டில் மதுபான உற்பத்திக்காக தற்போது பாவிக்கப்படுகின்ற மதுசாரத்தை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) அந் நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களும் அவற்றின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் வருடாந்த மதுசார உற்பத்திக் கொள்ளளவு யாதென்பதையும் ,

(iv) மேற்படி மதுசார விநியோக நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மதுசாரத்தை விநியோகிக்கையில் மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் வருடாந்தம் செலுத்தப்படுகின்ற வரியின் அளவு யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த மதுசார அளவுக்குமே 85% வரியை அறவிட மேற்கொண்டுள்ள வழிமுறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஏதேனுமொரு நிறுவனம் மூலமாக இவ்விதமாக 85% வரியைச் செலுத்தாமல் தமது உற்பத்திகளைச் சந்தைக்கு அனுப்பிவைத்தல் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஈ) ஆமெனில், மேற்படி முறைகேட்டினைத் தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன் ?

0452 / '09

9.

கௌரவ துனேஷ் கங்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i)

| | | |
|---|---|---|
| பி.ஜீ. ஹேமசிறி திலகரத்ன | - | பெல்மடுல்ல |
| மொஹொமட் முசம்மில் | - | நிட்டம்புவ |
| ரஞ்சித் பிரேமரத்ன | - | யக்கல |
| லால் பல்லியகுருகே | - | பத்தரமுல்ல |
| அதுல புஷ்பகுமார | - | அங்கொட |
| சிறிவர்தன கமராலகே | - | வெல்லம்பிட்டிய |
| நிஹால் படதுரகே | - | கனேமுல்ல |

ஆகியோர் இலங்கை வெளிநாட்டு வேலவாய்ப்புப் பணியகத்தில் சேவை உடன்படிக்கை செய்து , காப்புறுதி செய்துக்கொண்டு, மருதானை பயினாஸ் அசோசியேடட் நிருவனத்தினூடாக மாலைத்தீவில் சேவைக்காக 2009 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் அனுப்பப்பட்டுள்ளார்களென்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் படி அந்த நாட்டில் சம்பளம் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்,

(iii) மாலைத்தீவு உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அவர்கள் செய்த முறையீட்டின் பேரில் மீண்டும் அவர்கள் இந்நாட்டுக்கு அழைத்துவரப் பட்டுள்ளார்களென்பதையும்,

(iv) இவர்கள் இது சம்பந்தமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு முறையீடு செய்துள்ளார்களென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி முறையீடுகளின் படி அவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) உடன்படிக்கையை மீறியுள்ள குறிப்பிட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும் ,

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0086 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிலாக புதுச் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குகையில் அறவிடப்படும் கட்டணம் யாது,

(ii) புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குகையில் அறவிடப்படும் கட்டணம் யாது,

(iii) இந்த அனுமதிப்பத்திரத்தை தயாரிக்கும் கம்பனி யாது,

(iv) இக் கம்பனிக்கு ஒரு அனுமதிப்பத்திரத்துக்குக் கிடைக்கும் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிலாக புதுச் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்க வினைத்திறன் மிக்க வேலைத்திட்டம் ஒன்று உள்ளதா,

(ii) அவ்வாறாயின் அவ்வேலைத்திட்டம் யாது,

(iii) அதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்புருவரி மற்றும் மார்ச் மாதங்களில் முறையே காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களுக்குப் பதிலாக புதிச் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பித்தோர் எண்ணிக்கை யாது,

(iv) காலாவதியான அனுமதிப் பத்திரங்களுக்குப் பதிலாக 2009 ஜனவரி, பெப்புருவரி மற்றும் மார்ச் மாதங்களில் வழங்கப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது

(v) புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக 2009 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்புருவரி மற்றும் மார்ச் மாதங்களில் விண்ணப்பித்தோர் எண்ணிக்கை முறையே எவ்வளவு,

(vi) 2009 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்புருவரி மற்றும் மார்ச் மாதங்களில் வழங்கப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0110 / '09

11.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டின் வருடாந்த நுகர்வுக்குத் தேவையான கோதுமை மாவின் அளவு யாதென்பதையும்,

(ii) அத்தேவையில் எவ்வளவு தொகை மாவாக 2000 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்,

(iii) கோதுமை மாவுக்கு மேலதிகமாக எவ்வளவு கோதுமை மணிகள் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும் ,

(iv) இந்நாட்டுக்கு அவசியமான மாவுக்கான மொத்த தேவையில் எவ்வளவு தொகை இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற மாவுக்காக வரி அறவிடப் படுகின்றதாவென்பதையும்,

(ii) ஆமெனில், 2005 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு வரித்தொகை அறவிடப் பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கோதுமை மணிகளுக்காக வரி அறவிடப்படுகின்றதாவென்பதையும்,

(ii) ஆமெனில், 2005 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டுவரை வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு வரித்தொகை அறவிடப் பட்டுள்ளதென்பதையும்,

(iii) இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற கோதுமை மாவுக்காக வரி அறவிடப்படுகின்றதாவென்பதையும் ,

(iv) ஆமெனில், ஒரு மெற்றிக்தொன் மாவுக்காக அறவிடப்படுகின்ற வரித்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0369 / '09

12.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்படட்ட அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடைமுறைக்கணக்கின் மேலதிகப்பற்று எவ்வளவு,

(ii) தற்போது இக்கூட்டுறவுச் சங்கம் நடாத்தப்பட்டுவரும் பிரதான கட்டிடம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதா,

(iii) அது எந்த வங்கிக்கு என்ன காரணத்திற்காக,

(iv) இந்த ஈடு இப்பொழுது மீட்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சங்கத்தின் திருப்பிய காசோலைகளை மீண்டும் எழுதுவதனால் ஏற்படும் நட்டம் மாதாந்தம் எவ்வளவு என்பதை அவர்அறிவாரா?

(இ) கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் வைப்பாளர்பளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) சங்கத்துக்குச் சொந்தமாயிருந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிபுரிந்த 5 பணியாளர்களை வேறேதேனும் பணியில் ஈடுபடுத்தாமலுள்ளதுடன் இவர்களுக்கு மாதாந்தச் சம்பளம் மாத்திரம் வழங்கப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல் ஏன்?

0111 / '09

13.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வரவு செலவு மதிப்பீடுகள் மூலமாகவும் தனித்தனியாக சுகாதார நலத்துறை, போசணை அமைச்சுக்காக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப் பட்டதென்பதையும்,

(ii) 2005, 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளுக்காக தனித்தனியாக எவ்வளவு மீண்டுவரும் பணத்தொகை வழங்கப்பட்டிருந்ததென்பதையும்,

(iii) கிடைத்த பணத்தில் எத்தனை சதவீதம் செலவு செய்யப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2005, 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளுக்காக தனித்தனியாக எவ்வளவு மூலதனப் பணத்தொகை வழங்கப்பட்டிருந்ததென்பதையும்,

(ii) மேற்படி பணத்தில் ஒவ்வோராண்டிலும் செலவிடப்பட்டிருந்த தொகை யாதென்பதையும்,

(ii) செலவிடப்பட்ட பணம் சதவீதமெனும் வகையில் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மக்களின் சுகாதாரப் பணிகளுக்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் பணம் ஒதுக்கப்பட்டபோதிலும் உண்மையிலேயே மக்களுக்கு இப்பணம் கிடைக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சரும்,— இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (திருத்தம்),— 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 1.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

கௌரவ துலிப் விஜேசேக்கர,__ சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரோஹண திசாநாயக்க அமைப்பைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 145, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் முப்பத்தைந்து கோடி (ரூபா 35,00,00,000) ரூபாவிற்கும் மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 145 | — | மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டுவருஞ் செலவுகள் | ரூ. 35,00,00,000 |
| | | | ரூ. 35,00,00,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, செத்தெம்பர் மாதம் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 12 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 20,430,903,938.

2.

கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

3.

அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் அறநம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

4.

இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

5.

தாலியவக்க ஸ்ரீ ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

*8.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 285, நிகழ்ச்சித்திட்டம் 1,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் அறுபத்து எட்டு கோடி ஐம்பத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று மூன்றாயிரத்து தொளாயிரத்து முப்பத்து எட்டு (ரூபா 68,53,93,938) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 285 | — | கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| கருத்திட்டம் : 01 | — | கமத்தொழில் அபிவிருத்தி | |
| | | மீண்டுவருஞ் செலவுகள் | ரூ. 68,53,93,938 |
| | | | ரூ. 68,53,93,938 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 10 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 18,845,510,000.

*9.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*12.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*13.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*16.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*20.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*22.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*23.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*24.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*25.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*26.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*27.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*28.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*29.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*35.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*36.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

37.

